முதன்மை சார்பு நீதிமன்றம், மயிலாடுதுறை
முன்னிலை திருமதி பி.கவிதா, பி.ஏ.,எல்.எல்.பி.,
முதன்மை சார்பு நீதிபதி

ம.சா. 1 நாள்.11.09.2023

| MCOP. No. | 251/2019 | | |
|---|---|---|---|
| பெயர் | ராஜாபிரதாப்சிங் | த/பெ. | |
| வயது | | தொழில் | |
| ஜாதி | | மதம் | |
| கிராமம் | | தாலுக்கா | |

சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டு குறுக்கு விசாரணை

நான் தற்போது 26 வயது நடக்கிறது. நான் பி,பி,என் பவர் ஜெனரேட்டில் நிறுவனத்தில் வேலை செய்து வருகிறேன். நான் இரண்டு வருடங்களாக பணிபுரிகிறேன். விபத்து சமயத்தில் நான் பி,எஸ்சி இறுதியாண்டு படித்துக் கொண்டிருந்தேன். 3ம் மனுதாரர் எனது இளைய சகோதரர் ஆவார். எனக்கு திருமணம் ஆகவில்லை. 3ம் மனுதாரர் நீட் தேர்வு தேர்ச்சி பெற்று ஆதிபராசக்தி மருத்துவ கல்லூரியில் எம் எம் பி எஸ் இரண்டாம் படித்து கொண்டிருக்கிறார், அவர் மேஜர் ஆனவர் என்றால் சரிதான். இந்த விபத்தில் எனது அம்மா, 3ம் மனுதாரரும் விபத்தை நேரடியாக பார்க்கவில்லை, நான் நேரடியாக பார்த்தேன். இந்த விபத்து திருகடையூரில் உள்ள முகாம்பிகை லாரஜ் எதிர்புறத்தில் நடந்து. இந்த விபத்து நடந்து 4 வருடத்திற்கு முன்பு எனது அம்மாவிற்கு வேறு ஒரு விபத்து ஏற்பட்டது. அவ்வாறு விபத்து ஏற்பட்டதற்கு இது போல் மோட்டார் வாகன இழப்பீடு கேட்டு வழக்கு தாக்கல் செய்யவில்லை. நானும் எனது சித்தப்பாவும் எனது அப்பாவிற்கு பின்னால் அமர்ந்து வந்தோம் நாங்கள் வடக்கில் இருந்து தெற்கு நோக்கி வந்து கொண்டிருந்தோம். அந்த இடத்தில் ரோட்டை கடந்து செல்ல வேண்டிய அவசியம் இல்லை. எனது அப்பாவிற்கு பின்னால் 20 அடி துாரத்தில் நாங்கள் இருவரும் நடந்து வந்தோம். இதில் எனக்கும் சித்தப்பாவிற்கு எந்த அடியும் ஏற்படவில்லை. நாங்கள் தார் ரோட்டில் பக்கத்தில் உள்ள மண் ரோட்டில் சென்று கொண்டிருந்தோம். நாங்கள் சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை என்றால் சரியல்ல, எங்களை கடந்து சென்று தான் வாகனம் எனது அப்பா மீது மோதியது. எனது அப்பா தார் சாலையை குறுக்கே கடந்து செல்ல முயற்சித்த போது தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. எனது

தகப்பனாரின் வருமானத்தை சார்ந்து நாங்கள் இல்லை என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரர் ஒட்டுநருக்கு ஒட்டுநர் உரிமம் இல்லை என்றால் காவல் நிலையத்தில் உள்ளது என்று கூறினார்கள். 08.05.2019 அன்று விபத்து நடந்தது. விபத்து காலத்தில் 2ம் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் 1ம் எதிர்மனுதாரர் வாகனம் காப்பீடு செய்யப்படவில்லை என்றால் தெரியாது. எனது அப்பா தானே வந்து விபத்தை ஏற்படுத்தி கொண்டதாலும், 2ம் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் காப்பீடு செய்யப்படவில்லை என்பதாலும் நீங்கள் கோரியுள்ள இழப்பீடு கிடைக்க தக்கது அல்ல என்றால் சரியல்ல. எனது அப்பா விவசாய கூலி வேலை மற்றும் விறகு வேலை செய்து மாதம் ரூ.15,000/-சம்பாதித்து வந்தார் என்று சொல்லவது சரியல்ல என்றால் சரியல்ல. எங்களுக்கு சொந்த வயல் இல்லாததால் தினக்கூலி தினமும் கிடைக்காது என்றால் சரியல்ல, எனது அப்பாவின் வருமானத்தை மிகவும் அதிகப்படுத்தி கூறுகிறேன் என்றால் சரியல்ல. எது எப்படி இருந்தாலும் 2ம் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் இழப்பீடு கிடைக்க வாய்ப்பு இல்லை என்றால் சரியல்ல. உரிய காப்பீடு நிறுவனத்தை இவ்வழக்கில் சேர்க்காததால் மனுவில் கோரியுள்ள இழப்பீடு தொகை கிடைக்க தக்கது அல்ல என்றால் சரியல்ல.